# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

**முதலாந் தவணைப் பரீட்சை - 2023**

| | | |
|---|---|---|
| தரம் - 8 | குடியுரிமைக்கல்வி | நேரம் :- 2.00 மணித்தியாலம் |

பெயர் / சுட்டெண் ..............................................................................

## பகுதி – I

- ***01 முதல் 20 வரையிலான கேள்விகளுக்கு சரியான விடையின் கீழ் கோடிடவும்.***

01) பணம் அறவிட்டு வழங்கப்படும் பொதுச் சேவை.
   1) பாதுகாப்பு 2) போக்குவரத்து 3) சுகாதாரம் 4) கல்வி

02) பொது சேவைகளை வழங்குவதற்காக அரசாங்கம் பணத்தினை பெற்றுக்கொள்ளும் பிரதான வழிமுறைகள்
   1) வரி வருமானம் 2) நன்கொடைகள்
   3) வெளிநாட்டு உதவிகள் 4) பொது உதவி

03) அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை இராசதானிகளில் நன்கு அபிவிருத்தி அடைந்திருந்த சேவை?
   1)நீர்ப்பாசனம் 2) வங்கி 3) சுகாதாரம் 4) கல்வி

04) இலங்கையில் இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தியதற்காக கௌரவிக்கப்படுபவர் யார்?
   1) சேனக பிபிலே
   2) கலாநிதி சி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா
   3) புத்ததாச மன்னன்
   4) கே.புஷ்பகுமார

05) கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக வேகமாக வளர்ந்துள்ள சேவைகளில் ஒன்று.
   1) போக்குவரத்து 2) தொலைத்தொடர்பாடல்
   3) சுகாதாரம் 4) அஞ்சல்

06) ஆரம்ப சுகாதார வசதிகளை வழங்க நிறுவப்பட்ட நிறுவனம் எது?
   1) மருத்துவமனைகள் 2) சுகவாழ்வு மத்திய நிலையங்கள்
   3) மருந்தகங்கள் 4) ஆயுர்வேத மருத்துவமனைகள்

07) மனித வளத்தின் விருத்தி மற்றும் இருப்பு ஆகியவற்றின் மீது செல்வாக்குச் செலுத்தக்கூடிய பிரதான காரணியாக விளங்குவது எது?
   1) மருத்துவமனைகள் 2) சுகாதாரம் 3) கல்வி 4) செல்வம்

08) அரசு மட்டுமே வழங்கும் போக்குவரத்து சேவை.
   1) புகையிரத சேவை 2) பேருந்து சேவை
   3) படகு சேவைகள் 4) விமான சேவை

09) இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்துசாலையொன்றின் பொறுப்பதிகாரி யார்?
   1) தொழில்நுட்ப வல்லுநர்கள் 2) மேற்பார்வையாளர்
   3) சாலைப் பரிசோதகர்கள் 4) சாலை முகாமையாளர்



Education கல்வி
kalvi.lk

10) இலங்கையில் உள்ள மக்களுக்கு தொலைபேசி வசதிகளை வழங்குவதில் ஈடுபடும் முக்கிய நிறுவனம்.

1) ஸ்ரீலங்கா டெலிக்கொம் 2) வட்ஸ் ஆப் 3) முகப்புத்தகம் 4) டயலெக்

11) தற்காலத்தில் பொதுச் சேவைகளாக செயல்படும் முக்கியமான வெகுஜன ஊடகம் எது?

1) செய்தித்தாள்கள் 2) வானொலி 3) தொலைபேசி 4) இணையதளம்

12) குழந்தைகள் ஜனநாயக அனுபவத்தைப் பெறும் முக்கிய நிறுவனம்

1) கோவில் 2) பாடசாலை 2) சமூகம் 4) குடும்பம்

13) கலந்துரையாடி தீர்மானம் எடுக்கும் பொதுவான சந்தர்ப்பம்.

1) வைபவங்களை ஏற்பாடு செய்தல்
2) நிலம் வாங்குதல்
3) கல்வி நடவடிக்கைகளை திட்டமிடுதல்
4) திருமணங்கள் பற்றிய முடிவுகள்

14) பாடசாலையில் காணப்படும் ஜனநாயக பண்புகளில் ஒன்று.

1) நூலக வசதிகளை சமமாகப் பெறுதல்
2) பொறுமையாய் இருத்தல்
3) பிறர் கருத்தை கேட்பது
4) பிறர் கருத்துகளுக்கு மதிப்பளித்தல்

15) ஜனநாயக வாழ்க்கை முறையைப் பற்றி அறிந்து கொள்வதற்காக பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் இணை பாடவிதான நடவடிக்கை,

1) கல்வி கற்றல் 2) விளையாட்டு செயற்பாடுகள்
3) சமூக சேவை செய்தல் 4) தானம் வழங்குதல்

16) ஒரு நாட்டின் எதிர்கால வளம் யார்?

1) அரசியல்வாதிகள் 2) சிறுவர்கள் 3) விஞ்ஞானிகள் 4) மதகுருமார்

17) சிறுவர்கள் என ஏற்றுக் கொள்ளப்படுபவர்கள் யார்?

1) பதினெட்டு வயதிலும் குறைந்தோர்
2) பதினாறு வயதுக்குட்பட்டோர்
3) பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோர்
4) பதினாறு வயதுக்கு மேற்பட்டோர்

18) மகிழ்ச்சியின் உடலியல் வெளிப்பாடு.

1) துள்ளிக்குதித்தல் 2) அழுகை 3) பெருமூச்சு 4) புலம்பல்

19) பாதகமான மனவெழுச்சிகளை சமநிலைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகளில் ஒன்று.

1) சுத்தமான சூழலை பேணல் 2) பத்திரிகை படித்தல்
3) தியானம் 4) அரட்டை அடித்தல்

20) சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் நிறுவனம்.

1) மனித உரிமைகள் ஆணைக்குழு 2) மத நிறுவனம்
3) குடும்பம் 4) யுனிசெ.ஃப் (UNICEF)

(20 x 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – II

**ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடைளிக்கவும்.**

*(01)* i. பொது சேவைகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பதன் அடிப்படையில் மூன்று வகையான சேவைகளையும் குறிப்பிடவும்.

ii. ஆங்கிலேயர் காலத்தில் தொடங்கப்பட்ட நான்கு பொதுச் சேவைகளை குறிப்பிடுக.

iii. போதுச் சேவைகளின் ஐந்து பொதுவான பண்புகளை எழுதுங்கள்.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

*(02)* i. மேற்கத்திய மருத்துவ முறையின் கீழ் சுகாதார சேவை மூலம் செயல்படுத்தப்படும் மூன்று சேவைகளை குறிப்பிடுக.

ii. இலங்கை மலேரியாவை முற்றாக ஒழிக்க முடிந்ததற்கு நான்கு காரணங்களை குறிப்பிடுக.

iii. தொற்றா நோய்களைத் தடுக்க பொதுமக்கள் மேற்கொள்ள வேண்டிய ஐந்து வழிமுறைகளை குறிப்பிடுக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

*(03)* i. பயணிகள் போக்குவரத்து சேவைகளை வழங்கும் மூன்று நிறுவனங்களை எழுதுங்கள்.

ii. பல்வேறு செயல்பாடுகளைச் செய்ய மின்சாரம் இன்றியமையாதது. அவற்றில் நான்கை தருக.

iii. கல்வியின் ஐந்து செயல்பாடுகளைக் குறிப்பிடுக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

*(04)* i. இன்று தகவல் தொடர்பு சேவைகள் இன்றியமையாததாகிவிட்டமைக்கு மூன்று காரணங்களைக் குறிப்பிடுக.

ii. இலங்கையில் இயங்கும் நான்கு வெவ்வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்களைக் குறிப்பிடவும்.

iii. இலங்கை பொலிஸாரால் வழங்கப்படும் சேவைகள் ஐந்து தருக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)



kalvi.lk

(05) i. அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் மூன்று சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைக் குறிப்பிடவும்.

ii சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அரசாங்கத்தால் நிறுவப்பட்ட நான்கு நிறுவனங்களைத் தருக.

iii நீர் விநியோகத்தைப் பயன்படுத்தும் குடிமக்களின் ஐந்து கடமைகளைக் குறிப்பிடுக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(06) i. பாடசாலையில் காணப்படும் மூன்று ஜனநாயக பண்புகளை குறிப்பிடவும்.

ii. சிறுவர் உரிமைகள் நான்கு தலைப்புகளின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றைக் குறிப்பிடவும்.

iii. சிறுவர் உரிமைகளில் ஐந்தை குறிப்பிடவும்.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

(07) i. சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தில் செயல்படும் மூன்று அரச நிறுவனங்களைக் குறிப்பிடவும்.

ii மனித மனதில் எழும் நான்கு மனவெழுச்சிகளை குறிப்பிடுக.

iii பயத்தின் ஐந்து உடலியல் வெளிப்பாடுகளைக் குறிப்பிடுக.

(3 + 4 + 5 = 12 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

kalvi.lk